Dinaboomi
தினபூமி
15/03/2018
Page # 07

# சூர்யோதய் புதிய வங்கிக்கிளை சென்னையில் தொடக்கம்

சென்னை, மார்ச் 15-

சிறு நிதி வங்கித் துறையில் வளர்ந்து வரும் சூர்யோதய் சிறு நிதி வங்கி முன்னாள் வங்கியாளர்களை பங்காளர்களாகக் கொண்டு, முதல் வங்கிக் கிளையினை சென்னையில் தொடங்கியுள்ளது. இந்த வங்கியின் புதிய கிளையை மேலாண் இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர். பாஸ்கர் பாபு சென்னையில் நேற்று திறந்து வைத்தார்.

இது குறித்து பாஸ்கர் பாபு கூறுகையில், "முன்னாள் வங்கியாளர்களுடன் இணைந்து - அவர்களது பங்காண்மைக்கும், தொழில்முனைவுத் தன்மைக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் பங்காண்மையர் வங்கிக் கிளை ஒன்றினை முதன் முதலாக நாங்கள் சென்னையில் திறந்துள்ளோம். வலிமையான ஆளுமை, வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர்களுக்கான உயர்தர சேவை அனுபவம் - இவையே எங்களது சூர்யோதய் சிறு நிதி வங்கியின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

முன்னாள் வங்கியாளர்கள் இதன் பங்காளர்களாக இணைந்து இருப்பதால், அவர்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கு புரிந்து வைத்திருப்பர். அதன் அடிப்படையில் அவர்களிடமிருந்து புதிய ஐடியாக்களைப் பெற்று வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சேவையினை வழங்க உள்ளோம். இது ஒரு தனித்துவமிக்க வணிக முன்மாதிரியாக அமைவதால் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். என்று மேலாண் இயக்குனர் பாஸ்கர் பாபு தெரிவித்துள்ளார்.